செய்தி வெளியீடு எண் : 123 நாள் : 18.01.2024

## செய்தி வெளியீடு

## சேலம் மாவட்டம், கொண்டப்பநாய்க்கன்பட்டியில் செவி மாற்றுத்திறன் மாணவர்களுக்கான விடுதியுடன் கூடிய அரசு உயர்நிலைப்பள்ளி புதிய கட்டடம் – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (18.1.2024) தலைமைச் செயலகத்தில், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் செவி மாற்றுத்திறன் மாணவ, மாணவிகளின் கல்வி மேம்பாட்டிற்காக சேலம் மாவட்டம், ஏற்காடு அடிவாரம், கொண்டப்பநாய்க்கன்பட்டியில் 6 கோடியே 70 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள அரசு உயர்நிலைப் பள்ளிக்கான புதிய கட்டடத்தை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

மாற்றுத்திறனாளிகளின் நலனைக் பேணிக் காத்திட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இந்தியாவிலேயே முதல் முறையாக மாற்றுத்திறனாளிகளின் நல்வாழ்விற்காக தனி துறையை உருவாக்கினார். மேலும், அவர்கள் உரிய மரியாதையுடன் அழைக்கப்பட வேண்டும் என்ற நோக்கில் "மாற்றுத்திறனாளிகள்" என்ற சொல்லையும் அறிமுகப்படுத்தினார். மாற்றுத்திறனாளிகளின் வாழ்வினை மேம்படுத்தும் வகையில், அவர்களது கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் அதிகம் கவனம் செலுத்தி வருவதோடு, மாற்றுத் திறனாளிகள் சமுதாயத்தில் சுயமரியாதையுடனும், சம உரிமையுடனும் வாழ பல்வேறு திட்டங்களையும் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

மாற்றுத்திறனாளிகளின் மேம்பாட்டிற்காக தமிழ்நாடு அரசு மேற்கொள்ளும் பல்வேறு முன்னெடுப்பு நடவடிக்கைகளில் ஒன்றாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இன்று சேலம் மாவட்டம், கொண்டப்பநாய்க்கன்பட்டியில் திறந்து வைக்கப்பட்டுள்ள செவி மாற்றுத்திறன் மாணவர்களுக்கான அரசு உயர்நிலைப் பள்ளி கட்டடம், 1.31 ஏக்கர் நிலப்பரப்பில், 23,695 சதுர அடியில், 6 கோடியே 70 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ளது. இவ்வளாகத்தில், 15 வகுப்பறைகள், கலையரங்கம், 50 மாணவர்கள் மற்றும் 50 மாணவிகள் தங்கிப்பயிலும் வகையில் விடுதிகள், கணினி அறை, ஸ்மார்ட் வகுப்பு அறை, நூலக அறை, உணவருந்தும் அறை, சமையலறை, சுற்றுச்சுவர்

மாற்றுத்திறனாளிகளுக்குக்கு உகந்த கழிவறைகள் ஆகிய சிறப்பு வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. இப்பள்ளியில் மாற்றுத்திறனாளி மாணவ மாணவியர் தடையற்ற சூழலுடன் கல்வி பயில்வதற்கு ஏதுவாக, அனைத்து அறைகளிலும் ஒளிரும் விளக்குகள் (**Blinking Lights**) மற்றும் வழிகாட்டி பலகைகள் (**Signage Board**) பொருத்தப்பட்டுள்ளன.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி கீதா ஜீவன், தலைமைச் செயலாளர் திரு. சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., மாற்றுத்திறனாளிகள் நலத்துறை செயலாளர் திருமதி. ஜெயஸ்ரீ முரளிதரன், இ.ஆ.ப., மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் திரு. ஏ.கே. கமல் கிஷோர், இ.ஆ.ப., ஆகியோரும், சேலத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக நாடாளுமன்ற உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன், சட்டமன்ற உறுப்பினர் திரு. இரா. அருள், சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. செ. கார்மேகம் இ.ஆ.ப., மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

...........

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in